1978 பிப்ரவரி 27

பெறக்கூடிய நிலைமை இருக்கிறது. முறையாக தலைமைப் பொறியாளர்களை, சீனியர் அதிகாரிகளை சீனியாரிட்டி அடிப்படையிலே முன்பெல்லாம் பதவி உயர்த்தி வந்தார்கள். ஆனால் மாநகராட்சி கலைக்கப்பட்டதற்குப் பிறகு இந்த முறையைக் கையாளாமல் இருக்கிறார்கள். இப்போது அந்த முறையைக் கொண்டு சுகாதாரத் துறையிலே உள்ள அதிகாரிகளுக்கு பதவி உயர்வு அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இது பொறியியல் பணியாளர்களைப்பற்றிய கேள்வி. சுகாதாரத் துறை பற்றி தனியாகக் கேள்வி போட்டால் விளக்கம் அளிக்கலாம்.

திரு. தீ. சு. நல்லதம்பி : பொறியாளர்கள் சம்பந்தமாக விரைவில் அறிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். விரைவில் என்றால் சில நேரங்களில் ஒரு ஆண்டுக் காலம் கூட தாழ்த்தப்பட்டுவிடுகிறது. ஆகவே விரைவில் என்றால் எவ்வளவு விரைவில் என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : விரைவில் என்பதற்கு முழுமையான பொருள் எதுவோ அதைத்தான் குறிப்பிடுகிறேன்.

நேத்தாஜி சுபாஷ்சந்திரபோஸ் சாலை.

291 வினா—திரு து. புருஷோத்தமன் ; மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலையை அகலப்படுத்தி, கடைகளை ஒழுங்காக அமைக்கச் செய்யும் திட்டம் ஏதேனும் மாநகராட்சியினால் அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஆம். அரசினால் இத் திட்டத்திற்கு நிர்வாக அனுமதி 30-8-1977-ல் வழங்கப்பட்டது.

திரு. து. புருஷோத்தமன் : நடைபாதையிலே கடைகள் வைத்திருப்பதால் ஜனநெருக்கம் ஏற்பட்டு தொல்லை ஏற்படுகின்ற காரணத்தாலே அந்தக் கடைகளை எல்லாம் ஒழுங்குபடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அவைகளை ஒழுங்கு படுத்துவதற்கு ஆலோசனைகளைச் சொல்ல குழு அமைக்கப்பட்டு இருக்கிறது. அது மாநகராட்சியின் தனி அதிகாரி, ஆணையர் மற்றும் சில அதிகாரிகளைக் கொண்டதாக இருக்கிறது. அவர்கள் ஒழுங்குபடுத்துவதுபற்றிய அறிக்கையை அரசுக்கு வழங்குவார்கள்.

திரு. மு. அரங்கநாதன் : இது போன்ற கடைகளைக் கட்டுகின்ற பிரச்னை, பிராட்வே பஸ் ஸ்டாண்டிற்குள்ளே கடைகள் கட்டப்பட்டால் அது போக்குவரத்துக்கு இடைஞ்சலாகவும், சுகாதாரத்துக்கு கேடாகவும் இருக்கும் என்பதால் கடைகள் உள்ளே

அமைக்கப்படவில்லை. ஆனால் இந்த நிர்வாகம் வந்ததற்குப் பிறகு அதற்குள்ளே கடைகள் கட்டுவதற்கு அனுமதிக்கப் படுகிறார்கள் என்று சொல்லப்படுவது உண்மையா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இது நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சாலையைப் பற்றியது. பிராட்வேயைப்பற்றி நாம் தனியாக ஆலோசிக்கலாம்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்தத் திட்டத்தினுடைய மொத்த மதிப்பீடு எவ்வளவு? இந்தத் திட்டம் எப்போது துவங்கப்படும்? எப்போது முடிவடையும் என்பதை அறிவிப் பார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: உலக வங்கி உதவி யுடன், இந்தத் திட்டத்திற்கு ரூபாய் 10 இலட்சம் செலவில் 1978—79 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ள சென்னை மாநகராட்சி அனுமதித்து உள்ளது. இது இப்போது ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவர் அவர்களே, சைனு பஜார் என்று சொல்லப்படுகிற நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலையில் உள்ள நடைபாதையில் கடைகள் வைத்து இருக்கிறார் கள், அதனால் பொதுமக்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோருக்கும் தெரி யும்............

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவர் அவர்களே, தாங் கள் அதிகமாக என்னை மிரட்டாதீர்கள். அப்படியே மிரட்டி னாலும் நானும் பயப்படமாட்டேன்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொல்வது எல் லோருக்கும் தெரிந்தது. கேள்விக்கு வாருங்கள் என்று சொன் னேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, இந்த நடைபாதையிலே கடைகள் வைக்கப்பட்டிருப்பதால் பொது மக்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. அதனால் போக்கு வரத்துக்கும் தடங்கல் ஏற்படுகிறது. ஆனாலும் வியாபாரிகள் கடைகளையும் வைத்து வியாபாரமும் செய்ய வேண்டும். அதிலே சந்தேகம் கிடையாது. ஆனால் அவர்களையெல்லாம் ஒரு பகுதி யாக ஒதுக்கிவிட்டு மற்ற இடங்களை மட்டும் பொதுமக்களுக்கு போக்குவரத்துக்காக செய்து கொடுக்க அரசு முன்வருமா?

1978 பிப்ரவரி 27]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பொதுமக்களுக்கும் தொல்லை இல்லாமல் அவர்களுடைய வாணிகமும் பாதிக்கப்படா மல்தான் அதை ஒழுங்குபடுத்துவதற்கான முறை மேற்கொள்ளப் படுகிறது.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டுள்ள முதல் கேள்வியில் தமிழிலே தரப் பட்டுள்ள குறிப்பில் சைனா பஜாரில் உள்ள நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ் சாலை என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. உறுப்பினரே தவருக சைனா பஜார் என்று இப்போது இருப்ப தாக கருத்துத் தெரிவித்து இருப்பார்களானல் செயலாளர்கள் அதை திருத்தி இருக்க வேண்டும், அல்லது சைனா பஜாரும் இருக்கிறது, நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடும் இருக் கிறது என்ற நிலை உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சி உறுப்பினர் களுடைய வார்த்தைகளை எடுத்துவிட்டால் கூட அவருடைய உரிமை போவதாக அவர் கேட்பார்.

திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அப்படி என்றால், ஆங்கிலத்திலே நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு என்று சரியாக இருக்கும் பொழுது தமிழில் மொழி பெயர்க்கும்பொழுது ஏன் இவ்வாறு ஏற்பட்டது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழிலே கொடுக்கும் பொழுது அவர் அப்படி கொடுத்தாரோ என்னவோ ? ஆங்கி லத்திலே அவர்கள் முறையாகச் செய்திருக்கிறார்கள். உறுப் பினர் கொடுத்ததில் தமிழில் சைனா பஜார் என்று இருந்ததோ என்னவோ ? அப்படி இருப்பதால் அப்படியே போட்டிருக் கிறார்கள். அவர்கள் கொடுத்ததே அப்படி. எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொன்னதை ஏற்றுக்கொண்டு அதைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, தாங்கள் அளித்த தீர்ப்பின்வழி நின்று பார்த்தால் உறுப்பினர்கள் தரும் கேள்வி களை அப்படியே எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற முன் உதாரணம் ஆகி விடலாம். ஆகவே, கேள்வியின் மையம் அடிபடாமல் அவைகளைத் திருத்திக் கொள்வது செயலாளருடைய பொறுப்பாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி. அடுத்து மாண்பு மிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்கள்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, நேதாஜி போஸ் சாலையை அகலப்படுத்துகின்ற திட்டத்தின் அடிப்படையிலே அங்கே இப்பொழுது நெரிசலாக இருக்கின்ற பகுதியில் குறிப்பாக

கார் பார்க் செய்யப்படும் இடத்தை அண்டர் கிரவுண்ட் அடிப் படையிலே கீழே கார்களை நிறுத்துவதற்கு ஏதாவது வழிவகை செய்யப்பட்டிருக்கிறதா ? அப்படி செய்யப்படுமேயானுல் இன் னும் அதிகமான இடம் கிடைக்கும் என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, உருவாக இருக்கிற இந்தத் திட்டத்தில் வாகனங்களுக்காக 14 மீட்டர் பாதை அமைக்கப்படவும், மோட்டார் வண்டிகளை நிறுத்த வகையான இடத்திற்கும் வழிவகைகள் செய்யப்படும்.

திரு. அ. செல்வராசன் : தலைவரவர்களே, நடைபாதை மட்டும் அல்லாமல், வீதிகளிலும் கடைகள் அதிகமாக வந்து விட்டது. அவைகளை அகற்றி சரிப்படுத்த ஆலோசனை உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன். அதை ஒழுங்குபடுத்தத்தான் மாநகராட்சி தனி அதிகாரியின் தலைமையில் குழு அமைந்திருக் கிறது.

திரு. செஞ்சி. ந. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, சென்னை நகரில் விபத்துக்கள் அதிகமாக நடப்பதால் நடைபாதைக் கோயில்களை அகற்றும் உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அகற்றுகின்ற உத் தேசம் இல்லை, ஒழுங்குபடுத்துகின்ற உத்தேசம்தான் உண்டு.

கள்ளக்குறிச்சிக்கு குடிநீர் வழங்கல்.

* 292. வினு—திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு தொழி லாளர் நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னுற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சியில் குடி தண்ணீர் பற்றுக்குறை உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துக்கொண்ட நட வடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) ஆம்.

(ஆ) கள்ளக்குறிச்சி நகருக்கான குடிநீர்ப் பெருக்குத் திட் டம் ஒன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.